**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**------**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

| | |
|---|---|
| **Calender Case** | CC.175/2021 |
| **Miscellaneous** | |
| **Preliminary Register** | |
| **Sessions** | |
| **Deposition of witnesses for** | PW - 2 |

| | | |
|---|---|---|
| **Name** | **:** | Pandi |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1873 of the day of 28-11-2022**

**முதல் விசாரணை**

என் அம்மா பெயர் காந்தியம்மாள். என் அப்பா பெயர் சீனி தேவர்., என்னுடன் பிறந்தவர்கள் ஆறு பேர் ஆவார்கள். பெரியபாண்டி, பாண்டி, பாண்டியம்மாள், மணிகண்டன், முருகன், கணேசன் ஆகியோர் ஆவார்,. மணிகண்டன் எதிர் மனுதாரர் ஆவார். மணிகண்டனின் மனைவி பெயர் முருகேஸ்வரி ஆவார். மணிகண்டனின் மகள் ரோகிணி ஆவார். நான் திருமங்கலம் சோழவந்தான் ஊரில் குடியிருக்கிறேன். மணிகண்டனும் காந்தியம்மாளும் காந்தியம்மாள் வீட்டில் குடியிருக்கிறார்கள். காந்தியம்மாள் குடியிருக்கும் இடமும் வீடும் காந்திம்மாள் உடையது ஆகும். அங்கும் வீடுகட்டுவதற்கு பணம் கொடுத்தவர் காந்தியம்மாள். காந்தியம்மாள் பாண்டியன் திருமங்கலம் கூட்டுறவு வங்கியில் கணக்கு வைத்திருந்தார். அந்த பணம் காந்தியம்மாளுடைய அப்பா வழியில் சீதனமாக சொத்து விற்றததில் கிடைத்தது பணம். அந்த பணத்தை வங்கியல் எடுப்பதற்குஎதிர் மனுதாரர் மணிகண்டனை நம்பிக்கையாக அழைத்து செல்லும். நாங்கள் தள்ளிதள்ளி உள்ளோம். அவர்கள் ஒன்றாக இருந்ததால் அவர்களை அழைத்து செல்லும். பணத்தை எடுத்து

மணிகண்டன் கையில் எடுத்து செல்லும். காந்தியம்மாள் ரேகை தான் வைப்பார். அந்த பணத்தை வைத்துதான் காந்தியம்மாள் வீடு கட்டினார். அந்த வீடுகட்டுவதற்கான ஆவணங்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். 5 ஆண்டுகள் குடியிருந்தனர். இடத்தை பற்றி எதிர் மனுதாரரிடம் காந்தியம்மாள் கேள்வி கேட்க இடம் என்னுடைய இடம் பத்திரம் என் பெயரில் உள்ளது என்று கூறினார். மணிகண்டன் மனைவி , மணிகண்டன் மகள் 3 பேரும் சேர்ந்து அடித்து வீட்டை விட்டு வெளியே தள்ளிவிட்டார்கள். 108 ஆம்புலன்சில் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். கொரனா காலம் என்பதால் உள்நோயாளியாக சேர்த்துள்ளனர். இந்த சம்பவம் பற்றி காவல் துறையில் திருமங்கலம் வருவாய் வட்டாட்சியர், நீதிமன்றத்தில் புகார் செய்தனர். ஓட்டு வீட்டில் தனியாக குடியிருக்கிறார்., என் அப்பாவும் கூடவே இருக்கிறார். காந்தியம்மாளுக்கு எழுதப்படிக்க தெரியாது. என் அப்பாவும் கை நாட்டுதான். இந்த சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியும். அதனால் நடவடிக்கை எடுக்கச் சொல்லி இந்த மனுதாக்கல் செய்துள்ளேன்.